செ.வெ.எண்:-43/2020 நாள்:16.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

## தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கி வரும் கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பூசாரிகளுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.1000 வழங்கப்படவுள்ளது. - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கி வரும் கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பூசாரிகளுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.1000/- வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரணத்தொகை பூசாரிகளில் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்கு திண்டுக்கல் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பூசாரிகள் உடனடியாக தங்கள் பெயர், கைபேசி அல்லது தொலைப்பேசி எண், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க விபரம், அடையாள அட்டை விபரம் ஆகியவற்றை திண்டுக்கல் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதற்காக 7010121097 வாட்ஸ் ஆப் எண் மூலமாகவோ, 94421 78784(திண்டுக்கல் ), 7010238918(வேடசந்தூர்), 9442025115 (பழநி), 8838446417, 9788764488(நிலக்கோட்டை) மற்றும் 9944882835 (நத்தம் ) ஆகிய சரக ஆய்வர்கள் தொலைப்பேசி எண் மூலமாகவோ அல்லது acdgl@tnhrce.com என்ற மின் அஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். இது தொடர்பாக உதவி ஆணையர் அலுவலகத்திற்கு நேரில் வரத்தேவையில்லை என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**